மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 47/2018

பெயர் – கந்தசாமி (பி.வா.சா.1)

நாள் – 08.02.2023

வாதி தரப்பில் கு.வி.

எனது மருமகள் கெங்காலட்சுமி என்ன படித்துள்ளார் என்றால் இன்சினீயரிங் படித்துள்ளார்.எனது மகனுக்கும் மருமகளுக்கும் திருமணம் சமயத்திலும் அதற்கு முன்பாக எனது மருமகள் எட்டையபுரம் அரசு பாலிடெக்னிக்கில் ஆசிரியராக பணி செய்து வந்தார் என்றால் சாிதான். ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்த்தார். எனது மருமகளுக்கு மாத சம்பளம் ரூ.30,000/– சம்பளம் வருமா என்றால் ரூ.7000/– சம்பளம் விடுமுறை எடுத்தால் பணம் குறையும். எனது மருமகள் இறக்கும் அங்கு வேலை பார்த்தார் என்றால் சரியல்ல இரண்டு வருடத்திற்கு முன்பாகவே எனது மகன் எனது மருமகளுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் மருமகளை வேலைக்கு போகவேண்டாம் என்று சொன்னார். எனது மருமகன் உயிருடன் இருந்த வரை அந்த பாலிடெக்னிக்கில் வேலை பார்த்தார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மருமகள் வேலை பார்த்த காலம் சம்பந்தமாக ஆவணங்கள் பாலிடெக்னிக்கில் இருக்கும் என்றாலும் அந்த ஆவணங்களை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது மருமகளுக்கு தைய்ராடு பிரச்சினை, கற்பபை பிரச்சினை, நெஞ்சுவலி, இரத்த அழுத்தம் நோய் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் தனது உடல்நலம் பிரச்சினை பற்றி எனது மகனிடம் சொல்லிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மருமகள் வீட்டார் ஏமாற்றி திருமணம் செய்து வைத்ததாக நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. எனது மருமகளுக்கு உடல்நிலை சரியில்லாததது திருமணத்திற்கு முன்பே தெரியுமா என்றால் தெரியாது வைத்தியம் பார்த்த பிறகுதான் தெரியும். எனது மருமகளுக்கு எந்த மருத்துவமனையில் வைத்தியம் பார்த்தோம் என்றால் பல ஊர்களில் பார்த்தோம். திருவனந்தபுரத்திலும் பார்த்தோம். என் மருமகளுக்கு உடல் நிலை சரியில்லாததது மற்றும் சிகிச்சை எடுத்தது பற்றிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேட்கவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. எனது மருமகளுக்கு எந்தவித

நோயும் இல்லை என்றாலும் அதற்காக எந்த மருத்துவசிகிச்சையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதற்கான ஆவணங்களை கொண்டுவர தயாராக உள்ளேன். எனது மகன் என்ன படித்துள்ளார் என்றால் டிப்ளமோ படித்துள்ளார். திருமணத்திற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்பாக எனது மகன் வேலைக்கு போனார் என்றால் ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பாக வேலைக்கு போயிருப்பார். திருமணத்தின் போது எனது மகனுக்கு மாத சம்பளம் ரூபாய் இருபத்து ஐந்து ஆயிரம் என்றால் சரியல்ல. 54000 அல்லது 55000 ரூபாய் சம்பளமாக வெளிநாட்டில் பணிபுரிந்ததன் மூலம் வாங்கினார். நான் கோவில்பட்டியில் உள்ள மருத்துவர் திருப்பதி என்பவர் வீட்டில் வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல. சும்மா போய் வருவேன். அங்கு நடக்கும் வேலைகளை மேற்பார்வை பார்த்து சம்பளம் பெறுவேன் என்றால் மேற்பார்வை பார்ப்பேன் ஆனால் சம்பளம் பெறமாட்டேன். மருத்துவர் திருப்பதி அவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவமனை டீனாக இருந்தார் என்றால் கோவில்பட்டியில் மருத்துவ அதிகாரியாக இருந்தார். எனது மகன் எனது மருமகளுக்கு முப்பது லட்சம் ரூபாய் செலவு செய்ததாக சொல்லியுள்ளதற்கிணங்க எனது மகனுக்கு அவ்வளவு பணம் செலவழிக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. இன்றுவரை என் மகன் துபாயில் வேலை பார்த்து வருகிறார். கேரளாவில் ரத்த அழுத்ததிற்காக எனது மருமகளுக்கு ரூ.15,00,000/–செலவு செய்ததாக சொல்லியுள்ளதற்கிணங்க எனது மகனுக்கு அவ்வளவு பணம் செலவழிக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. இன்றுவரை என் மகன் துபாயில் வேலை பார்த்து வருகிறார். எனது மகன் எனது மருமகளுக்கு மருத்துவ செலவிற்காக ரூபாய் முப்பது லட்சம் மற்றும் ருப்பாய் பதினைந்து லட்சம் செலவழித்தது வழக்கிற்காக பொய் என்றால் சரியல்ல. எனது மருமகளுக்கு குழந்தை பிறக்கும் தகுதி இல்லை என சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மருமகளுக்கு குழந்தை பேறு அடையும் தகுதி இருந்தது என்றாலும் என்மகனுக்கு தான் அந்த தகுதி இல்லை என்றாலும் சரியல்ல. எனது மருமகளின் வருமானத்தை வைத்து சொத்துக்கள் வாங்கிவிட்டு எனது மருமகளை கொன்றுவிட்டோம் என்றால் சரியல்ல. எனது மருமகளுக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. எனது மருமகளுக்கு ஹார்ட் அட்டாக்காக முதலில் எந்த மருத்துவமனையில் பார்த்தோம் என்றால் அரசு மருத்துவமனைக்கு

கொண்டுபோனாம். இதய பிர்ச்சினை சம்பந்தமாக ஆபரேசன் செய்தோமா என்றால் திருவனந்தபுரம் அழைத்து சென்றுவிட்டார்கள்.திருவனந்தபுரத்தில் இலவசமாக ஆப்பரேசன் செய்யும் மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம் என்றால் சரியல்ல. தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவ்வாறு தனியார் மருத்துவமனைக்கு கொண்டுசென்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கேட்டால் தாக்கல் செய்ய தயாரா உள்ளேன். கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் டாக்டர் திருப்பதி அவர்களின் மகள் உமா என்பவர் மருத்துவராக உள்ளார் என்றால் சரிதான். எனது மகன் எனது மருமகளை வீட்டில் வைத்து கொன்றுவிட்டு டாக்டர் திருப்பதி மற்றும் டாக்டர் உமா ஆகியோர்களின் சிபாரிசின் படி நெஞ்சுவலி வந்து இறந்துவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மருமகள் இறந்தபோது எனது மகனுக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருப்பதாக வாதிகளுக்கு தகவல் சொன்னோம் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் வாதிகள் மருத்துவமனைக்கு வந்தபோதுதான் வாதிகளின் மகள் இறந்த விவரம் வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. எனது மருமகளை கொன்றுவிட்டு மருத்துவர்கள் போஸ்மார்டம் செய்ததை மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அவர்களை நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டு அவர்களது ஊருக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். எனது மருமகளை எரியூட்டியபிறகு தான் எனது மருமகளை நாங்கள் கொன்றுவிட்ட விபரம் வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. நாங்கள் கொல்லவில்லை. திருமணத்தின்போது வாதிகள் எனது மருமகளுக்கு ஐம்பது பவுன் நகை கொடுத்தார்கள் என்றால் இருபது பவுன் தான் கொடுத்தார்கள். காவல் நிலையத்தில் வாதிகள் என் மீதும், எனது மகன் மீது புகார் கொடுத்தார்கள் என்றாலும் சரிதான். நகை வங்கியில் இருப்பதாக முப்பத்தைந்து பவுன் நகை கொடுத்துவிட்டோம். எதிர்வழக்குரையில் நகை போடவில்லை என்று சொல்லியிருந்தால் அது பொய் என்றால் நாங்கள் நகை போட்டார்கள் என்றோ நகை போடவில்லைஎன்றோ சொல்லவில்லை காவல் நிலையத்தில் மிரட்டிதான் நகையை வாங்கினார்கள். எனது மருமகளின் தாயாருக்கு நூறு கிராம் நகை கொடுத்தோமா என்றால் என் மகன் கொடுத்திருக்கலாம் ஆனால் எனக்கு தெரிய நகை கொடுக்கவில்லை. எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை யார் சொன்னார்கள்

என்றால் நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். நூறு கிராம் நகை எனது மருமகளின் தாயாருக்கு கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் எனக்கு நகை கொடுத்தது பற்றி தெரியாது. தாவா 1,2 அயிட்ட சொத்துக்களுக்கு வாரிசுஎன்று உரிமை கோரினோம் என்றால் நான் கோரவில்லை. என் மகன் தான் கோருகிறார். அந்த இரண்டு சொத்துக்களையும் வாங்குவதற்கு எனது மகன் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் சொத்து எனது மருமகளின் தாயார் வாங்கியது, 2 வது அயிட்ட சொத்தை வாங்குவதற்கு நான் பணம் கொடுத்தேன். 2 வது அயிட்ட சொத்து வாங்குவதற்கான பணம் கொடுத்ததாக ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளோ என்றால் இல்லை. 1,2 அயிட்ட சொத்துக்கள் வாதிகள் தங்களது உழைப்பை வைத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எனது மகன் இரண்டாவது திருமணம் செய்துவிட்டாரா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் திருமணசான்று பதிவு சான்று நகலில் உள்ள புகைப்படம் என்னுடைய மகனுடையது என்றால் சரிதான். எஸ்கே.ரேகா என்று உள்ளவர் பற்றி எனக்கு தெரியாது. அந்த திருமணபதிவு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.11 ஆகும். எனது மகனுக்கு பெரிய இடத்தில் பெண் பார்பதற்காக வேண்டும் என்பதற்கா எனது மருமகளை கொன்றுவிட்டோம் என்றாலும் அதனால்தான் எனது மகனுக்கு இரண்டாவது திருமணம் நடந்த விவரத்தை தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மருமகளின் உடலை அவரது பெற்றோர்கள் ஓ,மேட்டுபட்டி கிராமத்திற்குகொண்டு சென்றுவிட்டார்கள். போஸ்ட்மார்டம் கூட செய்யவில்லை. எது மருமகளை கொன்ற தடயத்தை மறைக்கவேண்டும் என்பதற்காகதான் அவரசஅவசமாக ஓமேட்டுப்பட்டி கிராமத்திற்கு கொண்டுசென்றோம் என்றால் சரியல்ல. நான் சாப்பாடிற்கு என்ன செய்கிறேன் என்றால் பென்சன்வருகிறது என் மகன் வீட்டில் சாப்பிடுகிறேன்.வாதிகளின் மகள் இறந்துவிட்டதால் வாரிசு அடிப்படையில் தாவா சொ்த்துக்களையும் வாங்கிவிட்டால் வாதிகள் கடைசி காலத்தில் ஜீவனத்திற்கு என்ன செய்வார்கள் என்றால் அவர்களது சாப்பாட்டிற்கு நான் என்ன செய்ய முடியும். தாவா சொத்தை வாங்கினார் வாதிகளுக்கு எனது மகன் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது மகன் இரண்டாவது திருமணம் செய்துகொண்டதால் எனது மகன் இறந்து போன எனது மருமகளுக்கு வாரிசு

கிடையாது என்றால் சரியல்ல. எனது மகனுக்கும் வாதிகள் குடும்பத்திற்கும் தொடர்பு அறுந்துவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு எனது மகன் வாரிசாக முடியாது என்றால் சரியல்ல. வாதிகள் தங்களது சம்பாத்தியத்தில் எனது மருமகளுக்கு எழுதி கொடுத்த சொத்துக்கு எனது மகன் வாரிசாக முடியாது என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்து நாங்கள் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் அந்த சொத்துக்கும் இறந்துபோன கெங்காலட்சுமி எனது மகனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் இந்த வழக்கு பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதி சொத்துக்கான அசல் ஆவணங்கள் வாதிகளிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வங்கியில் அந்த பத்திரங்களின் பேரில் இறந்துபோன கெங்காலட்சுமி அடமானம் வைத்து விவாசய கடன் பெற்றுள்ளார். அந்த கடனை செலுத்தி வாதிகள் பத்திரங்களை திருப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தான் திருப்பினோம். எனது மருமகள் கடன் பெற்றதாக சொல்வது பொய் என்றாலும் வாதிகளிடம் தான் அசல் ஆவணம் உள்ளது என்றாலும் சரியல்ல. அசல் ஆவணங்களை எப்போதுமே கெங்காலட்சுமியிடம் ஒப்படைவில்லை என்றால் சரியல்ல. அதனால் இறந்துபோன கெங்காலட்சுமிக்கு சொத்துசம்பந்தமாக எந்த உரிமையும் வராது என்றால் சரியல்ல.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.

சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த உரிய ஆவணங்கள் அடிப்படையில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி தரப்பில் கு.வி. - இல்லை.